மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்.

# O.S .No.645/2023

# Old.No.05/2011

# DW 2

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரங்கநாதன் | மதம் | : இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

**குறுக்கு விசாரணை**

வழக்கின் வாதி ராஜேந்திரன் என்பவர் என் மீதும் எனது தகப்பனார் முத்து என்பவர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆம். வழக்கின் வாதி ஈ.சி.டி.வி நகரில் 7 பிளாட்டுகள் சொந்தமானது என குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆம். சுப்புராயபிள்ளை என்பவர் சரவணா ஏஜென்சி என்பவர்களுக்கு விற்பனை செய்துள்ளார் அவர்கள் தான் லேவுட்டு போட்டார்கள். வழக்கின் வாதி 23.10.1996 ல் சரவணா ஏஜென்சி நிறுவனத்தினிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் ஆம். 7 மனைகளும் 3 சர்வே எண்களான 12,13,14 ன் கீழ் வருகிறது என்றால் ஆம்.சர்வே எண். 12/2எ1ல் 1 ஏக்கர் 79 செண்ட் எனது தகப்பனார் முத்து என்பவர் பெயரில் உள்ளது. சாவே எண் 13ல் எனக்கு ஏதேனும் சொத்து உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண். 14/2எ1ல் 19ஏர்ஸ் நிலம் உள்ளது.

சர்வே எண் 12/2எ2என்ற மனையில் எனக்கு சொத்து உரிமை உள்ளதா என்றால் 11 செண்ட் கிணற்று பாகத்தில் 4ல் ஒரு பங்கான 2 3/4 செண்ட் உரிமை உள்ளது. அதை தவிர்த்து சர்வே எண் 12/2எ2ல் வேறு எந்த சொத்தும் எங்களது பெயரில் இல்லை. சர்வே எண் 14/2எ2வில் எங்களுக்கு ஏதேனும் சொத்து உள்ளதா என்றால் இல்லை. மேற்படி எங்களின்

பெயரில் உள்ள சொத்து எனது தகப்பனார் முத்து என்பவரால் கிரையம் வாங்கின சொத்தாகும். அதற்கான கிரைய பத்திரத்தை தாக்கல் செய்ய இயலும். சர்வே எண் 14/2எ1ல் ஆவணங்களின் படி எங்களுக்கு எவ்வளவு செண்ட் உள்ளது என்றால் 27 செண்ட் உள்ளது. ஆனால் பட்டா படி 41 செண்டில் உரிமை கோரியுள்ளோம் என்றால் ஆம்.

மேற்படி வழங்கிய பட்டாவனது யூடிஆர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதா என்றால் ஆம். அதில் 49 ஏர்ஸ் குறிப்பிடப்பட்டு உட்பிரிவு செய்து 19 ஏர்ஸ்க்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டது. ஆவணத்தில் இல்லாத 14 செண்டிற்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் அனுபவத்தின் பேரில் கொடுக்கப்பட்டது. மேற்படி 14 செண்டில் வாதிகள் மதில் சுவர் கட்டுவதை நாங்கள் தடுத்தோம் என்றால் ஆம். மேற்படி சங்கதிகள் 2010 ல் நடைப்பெற்றது என்றால் ஆம். இது சம்பந்தமாக வாதியின் சகோதரி சாந்தி என்பவரும் வாதியின் தாயார் எஸ்தர் பேபி என்பவரும் பல்லாவரம் காவல் நிலையத்தில் என் மீதும் தகப்பனார் பெயரில் எனது சகோதரர் சுவாமிநாதன் பெயரிலும் புகார் கொடுத்துள்ளார் என்றால் ஆம்.

இது சம்பந்தமாக டிசம்பர் மாதம் 2010 ம் ஆண்டில் பல்லாவரம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு தாம்பரம் நீதிமன்றத்தில் பிணை பெற்றுள்ளேன் என்றால் ஆம். வாதி ராஜேந்திரன் என்பவர் வெளி நாட்டில் உள்ளதால் நான் நேரடியாக பார்த்ததில்லை என்றால் ஆம் எனது தகப்பனார் தான் பார்த்துள்ளார். வாதி ராஜேந்திரன் என்பவர் இந்தியாவிற்கு வரவில்லை என்றும், எனது தகப்பனாரோ அல்லது நானோ பார்க்க வாய்பில்லை என்றால் சரியல்ல. அவர் வெளிநாட்டில் இறந்து விட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆலந்தூர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 930/2010 என்ற வழக்கை வாதி ராஜேந்திரன் மற்றும் வைத்தியலிங்கம் என்பவர்கள் பெயரில் அத்துமீறி நுழைய முற்பட்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆம். ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்தேன்.

அந்த வழக்கில் ராஜேந்திரன் என்பவருக்கு அழைப்பாணை பெறப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 14/2எ1 ல் எனது தகப்பனார் எனக்கு 21 செண்ட்டும், ஏனது அண்ணன் சுவாமிநாதன் என்பவருக்கு 18 1/2 செண்டும் செண்டில் மெண்ட் எழுதி வைத்தார். ஆலந்தூர்

நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 930/2010 என்ற வழக்கை தாக்கல் செய்வதற்கு 1மாததிற்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆம். 15.10.2010 ம் தேதியில் எனது தகப்பனார் எந்த சொத்திற்கு உயில் எழுதினார் என்றால் சர்வே எண் 14 உள்ள சொத்தில் உட்பிரிவு ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் பெயரில் சர்வே எண் 14ல் வேறு என்ன சொத்து உள்ளது என்றால் சர்வே எண் 14/2எ3ல் 41 செண்ட் உள்ளது. மேற்படி 41 செண்ட் யார் பெயரில் தற்போது உள்ளது என்றால் எனது தாயார் யசோதா என்பவர் பெயரில் உள்ளது. 2009 ல் தாயார் பெயரில் செண்டில் மெண்ட் எழுதப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி செண்டில்மெண்ட் எழுதிய போது எனது பெயரில் அண்ணன் சுவாமிநாதன் பெயரில் வேறு ஏதேனும் சொத்து இருந்ததா என்றால் அனுபவத்தில் இருந்தது. பத்திரம் எதுவும் இல்லை.

மேற்படி 41 செண்ட்டானது எனது தாயாரில் உள்ள சொத்தை எனது சகோதரிகளான கலா, சாந்தி, லட்சுமி என்பவர்கள் பெயருக்கு செண்டில்மெண்ட் எழுதி வைத்தார். சர்வே எண் 14ல் எனது தகப்பனார் எனது தாயாருக்கு செண்டில்மெண்ட் எழுதி வைத்தபிறகு அவர் பெயரில் எந்த சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எனது தாயார் பெயரில் உள்ள செண்டில்மெண்ட் பத்திரத்தை மறைத்து வழக்கிற்காக எனது பெயரிலும், சகோதரர் பெயரிலும் செண்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் பொய்யாக ஆவணங்களை தயாரித்து வாதிகளுக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல.

ஆவணங்கள் பொய் என்பதால் 2010லிருந்து எனது பெயரிலும், எனது சகோதரர் பெயரிலும் பட்டா எதுவும் உட்பிரிவு செய்து வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. சர்சே எண் 14/2எ1ல் வேறு நபர்களுக்கு உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் முத்து என்பவர் பெயரில் 8.41 ஏர்ஸ்க்கு தான் பட்டா எண். 906ன் கீழ் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டா எண் 906க்கு அதிக ஏர்ஸ் கொண்ட பட்டாவினை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.வழக்கு சொத்தான 7 மனை பிரிவுகளுக்கு வாதி ராஜேந்திரன் என்பவர் பெயரில் பட்டா வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் ஆம். ஆலந்தூர் நீதிமன்றத்தில் ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆம். சுப்புராயபிள்ளை

மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை சரவணா ஏஜென்சி பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

சுப்புராயப்பிள்ளை யாரிடமிருந்து எவ்வளவு சொத்து வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் இல்லை தகப்பனாருக்கு தான் தெரியும். மேற்படி ஈசிடிவி நகருக்கு ஒட்டியவாறு எங்களது விவசாய நிலம் இருந்தது என்றால் ஆம். ஈசிடிவி நகரில் அப்போது லேவுட்டு போட்ட விவரம் தெரியுமா என்றால் ஆம். ஆனால் முழு விவரம் தெரியாது தகப்பனாருக்கு தான் தெரியும். அந்த நகரில் லேவுட்டு போடும் போது ஆட்சேபனை செய்து வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. வாதிகள் மனை பிரிவுகள் எவ்வாறு பிரிக்கப்பட்டதோ அவற்றை அவ்வாறே வாங்கினார்கள் என்றால் ஆம். எங்களது இடத்தில் வாதிகள் அத்துமீறி நுழைந்ததாக நாங்கள் தடுத்தோம் என்றால் ஆம்.

வாதிகள் எங்கள் இடத்தில் அத்துமீறி நுழையவில்லை என்றால் சரியல்ல வாதிகள் அவர்கள் இடத்தில் சுற்று சுவர் கட்டியதை எங்கள் இடத்தில் அத்துமீறி கட்டியதாக எண்ணி நாங்கள் தடுத்தோம் என்றால் எங்கள் இடத்தில் அத்துமீறி வந்ததால் நாங்கள் தடுத்தோம். வாதிகள் எங்கள் இடத்தில் எவ்வளவு நீளம் மற்றும் அகலம் அத்துமீறி வந்தார்கள் என்றால் நீளம்,அகலம் தெரியாது 2 3/4 செண்ட் மட்டும் தெரியும். எங்கள் இடத்தையும், வாதிகள் இடத்தையும் சர்வேயர் வைத்து அளக்கப்பட்டதா என்றால் இல்லை. நாங்களாகவே தவறாக நினைத்து தடுத்தோம் என்றால் சரியல்ல. வாதிகள் இடத்தில் நாங்கள் அத்துமீறி நுழைந்ததை தடுத்துயிருக்க கூடாது என்று தாவா படி தீர்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறு விசாரணை - இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.